Cambridge Assessment International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2020**

INSERT **1 hour 30 minutes**

*9126663626-I*

**INFORMATION**

- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Blank pages are indicated.

NL 180883/3
© UCLES 2020

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–12** on the Question Paper.

ஒரு குடும்பத்தில் உள்ள மூன்று பெண்களுக்கும் விளையாட்டுகள் மிகவும் பிடிக்கும். ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு விளையாடுவார்கள். இவர்களுடைய குடும்பத்தில் எல்லாருக்கும் விளையாடுவதிலும் விளையாட்டுகளைப் பார்ப்பதிலும் விருப்பம் இருந்தது. இவர்களுடைய பெற்றோர் ஓட்டப் பயிற்சியிலும் நீச்சல் சொல்லிக் கொடுப்பதிலும் ஈடுபட்டனர். சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பெற்றோரும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். இவர்களுடைய பெரிய பெண் அவள் இருக்குமிடத்தில் ஒரு கிளப்பில் ஹாக்கி விளையாடுகிறாள். அதோடு பள்ளிக்கூடத்திலும் விளையாடுவாள். இரண்டாவது பெண் டென்னிஸ் விளையாடுவாள். மூன்றாவது பெண் கால்பந்து விளையாடுவாள். சனி ஞாயிற்றுக்கிழமைகளில், விளையாட்டுகளுக்கு வேண்டிய உடைகளைச் சுத்தம் செய்து, மடித்து சரியான பைகளில் வைக்க வேண்டும். காலணிகளையும் சுத்தம் செய்து சரியான பைகளில் வைக்க வேண்டும். மூன்று பைகளும் கருப்பாக இருப்பதால் அவரவர்களின் பெயர் போடுவதற்கு பையின் பக்கத்தில் ஒரு இடம் இருந்தது. அடிக்கடி பெற்றோர் பெண்களை விளையாடுவதற்கும் பயிற்சி செய்வதற்கும் மூன்று இடங்களில் கொண்டு போய் விடுவார்கள். சில சமயங்களில் இவர்களின் நண்பர்களின் பெற்றோர் கொண்டு போய் விடுவார்கள். விளையாடும் இடங்களும் பள்ளிக்கூடங்களும் தள்ளி இருப்பதால் எப்பொழுதும் செய்ய முடிவதில்லை.

ஒரு சனிக்கிழமை பெண்கள் மூவரும் தங்களுடைய பைகளை எடுத்துக் கொண்டு காரில் ஏறினார்கள். பெரிய பெண்ணிற்கு ஹாக்கி பயிற்சி செய்ய கிளப்புக்குப் போக வேண்டும். மூன்றாவது பெண்ணிற்கு கால்பந்து போட்டி விளையாடப் பள்ளிக்கூடம் போக வேண்டும். இரண்டாவது பெண்ணிற்கு டென்னிஸ் சொல்லிக் கொடுக்க பள்ளிக்கூடம் போக வேண்டும். பெண்கள் மூவரும் தாமதமாகக் கிளம்பினதால் யார் முதலில்இறங்கவேண்டும் என்று வாக்குவாதம் செய்தார்கள். அவர்களுடைய அம்மா வழக்கம் போல, தான் குறுக்கு வழியில் போகப் போவதாகவும் எந்த இடம் முதலில் வருகிறதோ அவர்கள் அங்கே இறங்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்றும் கூறினார். பெரிய பெண் இறங்கிய பிறகு, இரண்டாவது பெண் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் பார்த்து காரிலிருந்து குதித்து விட்டாள். பெற்றோர் மூன்றாவது பெண்ணை விளையாடக் கொண்டு விடப்போனார்கள்.

இரண்டாவது பெண் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காகத் தன் பையைத் திறந்தாள். அவள் பைக்குள் ஹாக்கி மட்டையும் அதன் காலணிகளையும் பார்த்தாள். அவள் மிகவும் கவலைப்பட்டு பெற்றோரைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டாள். ஆனால் அதற்குள் அவர்கள் தெருவில் திரும்பிப் போய் விட்டார்கள். அவள் குழந்தைகளுக்கு எப்படிச் சொல்லிக் கொடுக்க முடியும் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். எப்படி தன் அக்கா ஹாக்கி மட்டை இல்லாமல் விளையாடப் போகிறார் என்று நினைத்தார். அதே சமயத்தில் பெரிய பெண் தன்னிடம் இருந்த பையைப் பார்த்த போது கடைசிப்

© UCLES 2020 

பெண்ணின் காலணியும் அவளுடைய உடைகளும் இருந்தன.

அன்று மூன்று பெண்களாலும் விளையாட முடியவில்லை. இரண்டாவது பெண் ஒரு குழந்தையிடமிருந்து மட்டையை வாங்கி கொஞ்சம் சொல்லிக் கொடுத்தாள். அன்று மத்தியானம் மூன்று பெண்களும் கடைக்குப் போய் இரண்டு விளையாட்டு சாமான்கள் வைக்கும் பைகளை, ஒன்று நீல நிறத்திலும் மற்றது பச்சை நிறத்திலும் வாங்கினார்கள். மூன்று நிறங்களில் பைகள் இருந்த படியால், தங்கள் பெயர் அட்டைகளையும், அவர்கள் விளையாடும் விளையாட்டின் சின்னங்களையும் தங்களுக்குப் பிடித்த பையில் ஒட்டிக் கொண்டனர். இதனால் குழந்தைகள் இடையே குழப்பங்கள் குறைய ஆரம்பித்தன. குழந்தைகள் தங்களுக்கு இடையில் குழப்பங்களைத் தாங்களே தீர்த்துக் கொண்ட படியால் பெற்றோர் மிகவும் சந்தோஷம் அடைந்தனர்.

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.

© UCLES 2020 